# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 25.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# தமிழ் தலைமைகள் முட்டுகோடுத்த கடந்த அரசினால் ஒரு அரசியல் கைதியை கூட விடுதலை செய்ய முடியவில்லை

## மட்டக்களப்பில் வியாழேந்திரன் தெரிவிப்பு



(கல்லடி நிருபர்)

தமிழ் தலைமைகள் முட்டுகொடுத்த கடந்த அரசாங்கத்தினால் ஒரு அரசியல் கைதியை கூட விடுதலை செய்ய முடியவில்லை. ஆனால் தற்போதைய எமது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களினால் 16 தமிழ் அரசியல் கைதிகள் ஒரே தடவையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் விசேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு விடயமாக

02 ஆம் பக்கத்தில்...

# “இறப்பு சான்றிதழ் விடயத்தை கண்டிக்கின்றோம்”

(காந்தன்)

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் கைதையும், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் குழந்தைகளுக்கு இறப்பு சான்றிதழ் விடயத்தையும் கண்டிப்பதாக வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்கள்,

02 ஆம் பக்கத்தில்...

# ராஜபக்ச அரசாங்கமே தமிழ் பிள்ளைகளுக்கு துப்பாக்கிக்கு பதிலாக பேனா வழங்கியது!

## காரைதீவில் வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீரதிசாநாயக்க

(வி.ரி.சகாதேவராஜா)

வேற அரசாங்கம் தற்போது இருந்திருந்தால் கொரோனவால் ஒரு லட்சம் பேர் செத்துமடிந்திருப்பர். எமது ராஜபக்ஸ அரசாங்கம் இன்று கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.எனவே மக்கள் இன்றைய அரசாங்கத்திற்கு நன்றிகூறவேண்டும்.

இவ்வாறு வனஜீவராசிகள் பாதுகாப்பு வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விமலவீர திசாநாயக்க காரைதீவில் நேற்று(24)வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.



02 ஆம் பக்கத்தில்...

# நான்கு கட்டங்களாக திறக்கப்படவுள்ள பாடசாலைகள்

நான்கு கட்டங்களாக பாடசாலைகளை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். சுகாதார அமைச்சின்

02 ஆம் பக்கத்தில்...



# உள்ளக போறிமுறை ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பது ஏமாற்றமளிக்கும் விடயம்

(யாழ்.கீதன்)

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க முன்வந்துள்ள அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஸ, அவர்கள் மரணிப்பதற்கு காரணமானவர்கள் தொடர்பிலும் பொறுப்புக் கூற வேண்டும் என

02 ஆம் பக்கத்தில்...

# பல மாகாணங்களில் கடுமையான மின்னல் தாக்கும் என அறிவிப்பு

இலங்கையின் பல மாகாணங்களில், கடுமையான மின்னல் தாக்கம் ஏற்படலாமென வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய,

02 ஆம் பக்கத்தில்...

# உள்நாட்டு போறிமுறையை நம்பத் தயாரில்லை

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(யாழ்.கீதன்)

ஒரு போதும் நாம் உள்நாட்டு பொறிமுறையை நம்பத் தயாரில்லை என இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசுடன் பேசுவதாக இருந்தால் சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் தான் பேச வேண்டும்.

02 ஆம் பக்கத்தில்...

# பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளாய்விற்குட்படுத்தல் பாதுகாப்பு செயலாளர் ஹனாசிங்கர் ஆராய்வு



பயங்கரவாதத்தடைச் சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்தல், சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையிலான சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## அட்டாளைச்சேனை பிரதேச

# மீனவர்கள் படகு மீதேறி போராட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர கோருகின்றனர்





(நூருல் ஹுதா உமர்)

மீன்பிடித் திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளரின் செயலை கண்டித்தும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தலையிட்டு தீர்வை பெற்றுத்தருமாறு கோரியும் அம்பாறை மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...













# அதிகாரவர்க்கத்தின் தமிழர் உணர்வுகளை அழிக்கும் அராஜக அடக்குமுறை

**ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**



நாட்டை ஆளும் அதிகார வர்க்கத்தினர்,தமிழர்களை அராஜகம் அடக்கு முறை அடாவடிச் செயல்கள் மூலமாகவே அடக்கியாண்டு வருகின்றனர். அந்த வகையில் அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தமிழ்த்தியாகி ஒருவரைக்கூட நினைவு கூரக்கூடாது என்ற அடிப்படையில் பொலிசார் செயற்பட்டுள்ளார்கள். அதாவது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அவர்கள் யாழ் நல்லூரில் திலீபன் நினைவகத்தில் கற்பூரமேற்றி அவரது தியாகத்தை உணர்வுபூர்வமாக நினைவுகூர முற்பட்டபோது பொலிசாரினால் பலாத்காரமான முறையில் பிடித்து இழுக்கப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளார்.புனிதமான கற்பூரதீபம் பொலிசாரின் சப்பாத்துக்கால்களால் தட்டிவிடப்பட்டதாக அறியப்படுகிறது.அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களோடு இன்னும் இரு ஆதரவாளர்கள் பலாத்காரமாகப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்லப்பட்டு பொலிஸ்நிலையத்தில் வாக்கு மூலம் பெறப்பட்ட பின்னர் நீதிமன்றப் பிணைமூலமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டில் தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. உடைமைகள அழிக்கப்பட்டன. உரிமைகள் மறுக்கப்பட்டன. தற்போது தமிழர்களின் உணர்வுகளை அழிக்கின்ற செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அதில் ஒன்றுதான் மறைந்த உறவுகளை நினைவுகூரக்கூடாது என்கின்ற கடுமையான அடக்கு முறையாகும். அதன் ஒரு வடிவமே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களின் பலவந்தமான கைதாகும். பாராளுமன்ற உறுப்பினர் என்றும் பாராமல் அவர் பொலிசாரால் பிடித்து இழுக்கப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதே போன்றுதான் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அடித்து நொருக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழகத்தூபி தகர்க்கப்பட்டது. மொத்தத்தில் உயிர், உடைமை, உரிமை, உணர்வு அழிக்கப்படுகின்ற பறிக்கப்படுகின்ற செயற்பாடுகளைப் பேரின அடிப்படை வாதம் தொடர்ந்தும் செய்து கொண்டு தான் இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. நீதியின் கதவுகள் எப்போது திறக்கப்படும் என்பதுதான் தமிழர்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அகிம்சை வழிப் போராட்டமும் அடக்கப்பட்டது ஆயுத வழிப் போராட்டமும் பன்னாடுகளின் ஒத்துழைப்புகளுடன் மௌனிக்கச் செய்யப்பட்டது. இராஜதந்திரப் போராட்டமாவது தமிழ் மக்களுக்கு நியாயத்தினை வழங்க வேண்டும். அதற்குச் சர்வதேச நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். ஜனாதிபதி ஐக்கிய நாடுகள்சபைச் செயலாளருடன் கைகுலுக்கிச் சமாதானப் பேச்சுக்கு,புலம்பெயர் தமிழ் சமூகங்களைப் அழைக்கிறார். ஆனால் நாட்டில் அடக்கு முறைக்குக் குறைவே இல்லை. தலையாட்டித் தமிழ்ப் பிரகிருதிகளும் அரசோடு ஒட்டிக்கொண்டுதான் பிழைக்கிறார்கள்.

## பல மாகாணங்களில் கடுமையான

வடமேற்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக காற்று வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## உள்ளக பொறிமுறை ஊடாக பிரச்சினைகளுக்கு

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், உள்ளக பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பது ஏமாற்றமளிக்கும் விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஸவின் ஐ.நா. பொதுச் சபை உரை முன்னேற்றமளித்தாலும், அதில் நம்பிக்கை கொள்ள முடியாது என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## அட்டாளைச்சேனை பிரதேச மீனவர்கள் படகு மீதேறி போராட்டம்

அட்டாளைச்சேனை பிரதேச மீனவர்கள் படகுகளில் ஏறி வித்தியாசமான போராட்டம் ஒன்றை அட்டாளைச்சேனை கடற்கரையில் நேற்று (24) மாலை முன்னெடுத்தனர்.

பதாதைகளை ஏந்திக்கொண்டு கடற்கரையில் ஊர்வலமாக பவனி வந்த மீனவர்கள் போராட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர். இதன்போது மீனவ சங்கங்களின் சார்பில் கருத்து தெரிவித்த மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் தங்களுக்கும் தங்களுக்கு நல்லது செய்யும் மீன்பிடி பரிசோதகர் எஸ். பாபுவுக்கும் தொடர்ந்தும் மீன்பிடித்திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளரினால் அநீதிகள் நடந்துவருவதாக குற்றம் சாட்டினார்கள்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த மீனவர்கள் சட்டவிரோதமான சுறுக்குவலை பாவனை எங்களின் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது. அவ்வாறு சட்டவிரோத செயலை செய்பவர்களுக்கு உதவும் விதமாக மீன்பிடித்திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளர் செயற்பட்டு வருகிறார். சட்டநடவடிக்கைகளின் போதும் அதிகாரதுஷ்ப்பிரயோகம் செய்கிறார். உதவிப்பணிப்பாளர் கூறும் விடயங்களை ஏற்றுக்கொள்ளாமல் மீனவர்களின் பக்கம் நின்று எவ்வித கையூட்டல்களுக்கும் சோரம் போகாத அதிகாரி எஸ். பாபுவை இடமாற்றம் செய்துள்ளார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அவரது இடமாற்றத்தை ரத்துசெய்து அறிவிக்க மீன்பிடி அமைச்சர் உடனடியாக முன்வரவேண்டும்.

வடக்குக்கு சிறந்தமுறையில் சேவையாற்றும் அமைச்சர் டக்ளஸ் இனிவரும் காலங்களில் கிழக்கிற்கும் நிறைவான சேவையை முன்கொண்டு செல்லவேண்டும். இது விடயம் தொடர்பில் பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காஸிமிடம் பேசியுள்ளோம். நிரந்தரமான தீர்வை வழங்காது விட்டால் மீன்பிடியை நிறுத்திவிட்டு கறுப்புக்கொடி போராட்டத்தை அறிவிக்க தயாராக உள்ளோம் என்றனர்.

## உள்நாட்டு பொறிமுறையை

ஒரு போதும் இலங்கை அரசை நம்பத் தயாரில்லை. இலங்கை அரசுடன் பேச செல்வதென்பது தற்கொலைக்கு சமம்.நடந்த இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

## நான்கு கட்டங்களாக திறக்கப்படவுள்ள பாடசாலைகள்

பணிப்பாளர் நாயகம் எங்களுக்கு நான்கு கட்டங்களில் பாடசாலைகளைத் தொடங்க அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றையதினம் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அனைத்து ஆளுநர்களையும் அழைத்து அதன்படி செயற்படுமாறு அறிவுறுத்தினார். நாட்டில் உள்ள 10,155 பாடசாலைகளில் 3884 பாடசாலைகள் 15 வரை உள்ளன. இந்த பாடசாலைகள் அனைத்தையும் நாங்கள் தொடங்கலாம் என்று மாகாண ஆளுநர்கள் அமைச்சருக்கு நம்பிக்கை அளித்தனர்.

இத்தகைய பாடசாலைகளில் மாணவர்கள் பாதுகாப்பாக தங்கள் கல்வியைத் தொடரக்கூடிய சூழல் உள்ளதா? இன்று முதல் சம்பந்தப்பட்ட மாகாண, வலய மற்றும் கோட்டக் கல்வி பணிப்பாளர்கள் ஏற்கனவே நிலைமையை கண்காணித்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

## பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளாய்விற்குட்படுத்தல்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்னவிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கருக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்றது.

இதன்போது சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புக்களை முடக்குவதற்காக பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்குத் தனது பாராட்டை வெளிப்படுத்திய ஐ.நா வதிவிடப்பிரதிநிதி, இந்த நடவடிக்கைகள் இலங்கை உள்ளடங்கலாகப் பிராந்திய நாடுகள் அனைத்திற்கும் மிகவும் சாதகமானதாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்ததாக பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அண்மைக்காலத்தில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பான ஹனா சிங்கருக்கு விளக்கமளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்ட சுமார் ஒரு டொன் அளவிலான போதைப்பொருட்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் எடுத்துரைத்தார் என்றும் அதுமாத்திரமன்றி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்விற்கு உட்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இச்சந்திப்பு தொடர்பில் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கின்றார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக வழங்கக்கூடிய செயற்திறன் வாய்ந்த மருத்துவ உதவிகள் தொடர்பில் பாதுகாப்புச்செயலாளருடன் கலந்துரையாடிய அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை அதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கும் என்றும் குறிப்பிட்டேன்.

அதுமாத்திரமன்றி சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்துவரும் நெருக்கடிநிலை குறித்தும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்துவது குறித்தும் பேசினேன்.

மேலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை வலுப்படுத்துவதென்பது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் பூகோளரீதியான பயங்கரவாதத்தைத் தடுப்பதற்குமான சிறந்த ஆயுதமாகும்' என்று ஹனா சிங்கர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு அவசியமான சுகாதார மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "இறப்பு சான்றிதழ் விடயத்தை கண்டிக்கின்றோம்"

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கான எங்கள் தொடர் போராட்டத்தின் 1681வது நாள் இன்று. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் இறந்த நபரை நினைவுகூரும் வகையில் கற்பூரம் ஏற்றி வைத்திருந்தபோது அவரை கைது செய்ததைக் கண்டிக்கிறோம்.

இது சர்வதேச சட்டத்தை மீறுவதாகும். அவரை கைது செய்தது ஒரு அடக்குமுறை. காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் குழந்தைகளுக்கான இறப்பு சான்றிதழை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். நியூயோர்க்கில் கோட்டாபய ராஜபக்சே அதைப் பரிந்துரைத்தார்.

முதலில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, உயிருடன் இருக்கும் குழந்தைகளைக் கண்டுபிடிக்க விசாரணை செய்யட்டும். பல சிறுவர்கள் அடிமைத் தொழிலாளர்களாகவும், தமிழ் பெண்கள் பாலியல் அடிமைகளாகவும் அனுப்பப்பட்டனர் என்பது அமெரிக்க அரசுத்துறை உட்பட அனைவருக்கும் தெரியும். இது அனைத்தும் தமிழ் துணை ஆயுதக் குழுக்களின் உதவியுடன் செய்யப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களில் பெரும்பாலோர் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். மற்றும் அவர்களில் பாதிப் பேர் 'பாதுகாப்பு வலயத்தை ' விட்டு இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றனர். இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தால் கையாளப்பட்டவர்கள்.

சர்வதேச அதிகாரிகளால் சரியான விசாரணை இல்லாமல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்குவது ஐநா சாசனம் அல்லது சர்வதேச விதிமுறைகளை மீறுவதாகும். இலங்கையுடனான %4 வருடப் பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் குறுக்கீடுகளைத் தவிர்ப்பதற்காக இலங்கை பேச்சுவார்த்தை, நல்லிணக்கம், அரசியலமைப்பு சட்டசபை இவை யாவும் ஒரு அரசியல் மறைப்பாகப் பயன்படுத்துகிறது.

எனவே, தமிழ் அரசியல் கட்சிகள் இலங்கையுடன் பேசுவதை நிறுத்தி, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவைத் தமிழர்களுக்கு உதவ அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

## ராஜபக்ச அரசாங்கமே தமிழ் பிள்ளைகளுக்கு துப்பாக்கிக்கு

2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் பிரதே செயலக கேட்போர்கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு தமிழில் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

தமிழ்த்தலைவர்கள் வெறுமனே பேசிப் பேசி காலத்தைகடத்துகிறார்கள். பராளுமன்றத்திலும் நாக்கிழிய கத்துவார்கள். இறுதியாக இராசமாணிக்கம் கத்தினார். என்ன பிரயோசனம்.? இவர்களால் தமிழ்மக்களுக்கு பச்சைத்தண்ணிகூட கிடைக்கவில்லை.தமிழ் மக்கள் படித்தவர்கள். இன்று இந்த கையறு நிலைமையில் இருப்பதற்கு காரணம் இந்த தலைவர்கள்தான்.இவர்களுக்கு பின்னால் இன்னமும் சென்றால் இருப்பதையும் இழக்கவேண்டிவரும்.

கடந்தகால யுத்தத்தால் நாடே நாசமானதை அறிவோம். 1988 -89 காலப்பகுதியில் மட்டும் குறிப்பாக பிரேமதாச காலத்தில் 60ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். அதேபோல தமிழர்களும் இறந்தார்கள்..

தமிழ்ப்பிரதேசத்தில் பாடசாலை நடக்கவில்லை.கட்டடம் இல்லை ஆசிரியர்கள் இல்லை. அபிவிருத்தி இல்லை. பென்னுக்குப்பதிலாக கன்(துப்பாக்கி) தூக்கினார்கள்.

ஆனால் எமது ராஜபக்ச அரசாங்கமே தமிழ்பிள்ளைகளுக்கு துவக்குக்குபதிலாக பென் வழங்கியது. யாழ்ப்பாணம காங்கேசன்துறை முதல் கொழும்பு வரை கார்ப்பட்ட போட்டது.

கல்முனை முதல் கொழும்புவரை கார்ப்பட் போட்டது.

அன்று அம்பாறையிலிருந்து திருகோணமலை போக 9மணித்தியாலயம் எடுத்தது. இன்று 3மணிநேரத்தில் செல்கிறோம்.

நான் 25வருடங்கள் அரசியல்வாதியாக இருக்கிறேன். கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சராகவிருந்தேன். ஜாதிமதபேதமின்றி அனைவருக்கும் உதவினேன்.

ஆனால் எனக்கு கல்முனையில் ஆக ஏழு வாக்குகள் மாத்திரமே கிடைத்தது. அது பரவாயில்லை. உங்கள் பிரதிநிதிகளை அனுப்புங்கள். கலையரசன் இருந்து என்ன செய்ய? எமது அணியில் ஒருவரை அனுப்புங்கள். கூடிய அபிவிருத்தியைகாணலாம்.

கொரோனா இல்லாவிடின் இந்த நாடு இந்நேரம் மலேசியாவாக இருந்திருக்கும். கொரோன இருந்தபோதிலும் அபிவிருத்திப் பணிகள் தொடர்கின்றன. கிராமத்தில் ஒரு பிரிவுக்கு முதல் 20லட்சருபாவுக்கு வீதிகள் தந்தோம். தற்போது 30லட்சருபாவுக்கான வேலைத்திட்டங்களை முன்மொழிந்திருக்கிறீர்கள். அதைச்செய்வோம்.

காரைதீவுக்கென தனியான ஐஸ் பக்டரி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காரைதீவு சுகாதாரவைத்தியஅதிகாரி மற்றும் பிரதான தபாலகத்திற்கான திருத்வேலைகளுக்கும் உதவவுள்ளோம்.

ஆனால்தேர்தல் வந்தால் சஜித் ரணில் நல்லம். ராஜபக்ச கொலைகாரன் என்று தூக்கிப் பிடிப்பார்கள்.உங்களிடையே மனமாற்றம் அவசியம்.

கொரோனாவுக்கு சீனா அரசாங்கம் எமது நாட்டிற்கு உதவுகின்றது. ஒரு ஊசிக்கு பத்தாயிரம் ருபா செலவாகிறது. நாட்டில் வருமானம் குறைவு. நாட்டில் 30லட்சம் பேருக்கு தொழில் இல்லை.ஆசிரியர்கள் சுகாதரத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் மேலதிக வேதனம் தேவையென்று . செலவு கூட. எனினும் நாம் மக்களுக்கான அபிவிருத்திபணிகளை முன்னெடுத்துவருகின்றோம். ஒத்துழைத்தால் முன்னேறலாம். என்றார்.

பிரதிதிட்டமிடல்பணிப்பாளர் ரி.மோகனகுமார் நன்றியுரையாற்றினார்.

## தமிழ் தலைமைகள் முட்டுகொடுத்த கடந்த அரசினால் ஒரு

இருந்தாலும் சரி இராணுவ முகாம் காணிப் பிரச்சனைகள், மேச்சல் தரை பிரச்சனை உள்ளிட்ட தமிழ் மக்களுக்கு மிக நீண்ட நாட்களாக புரையோடிக்கிடக்கின்ற தீர்க முடியத ஏனைய அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே நாங்கள் அரசுடன் இணைந்து பயணிக்கின்றோம், எங்களுடை மக்களின் உரிமை சார்ந்த அரசியல் பயணத்தோடு இணைத்து அபிவிருத்தி சார்ந்த அரசியலையும் நாம் முன்னெடுப்போம்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு வலிமையான அரசியல் கட்டமைப்பின் ஊடாக எமது உரிமை சார்ந்த அரசியலிற்கு சமாந்தரமாக அபிவிருத்திசார்ந்த செயற்பாடுகளையும் முன்னேடுப்போம். அதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தம்மாலான உதவிகளை எமக்காக செய்வார்.

அண்மையில் கூட அனுராதபுரசிறைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பார்வையிட்டுருந்தார். எதிர்வரும் நாட்களில் நிச்சயமாக எமது மக்களுக்கு இருக்கின்ற 2 மிக முக்கியமான பிரச்சனை அதில் ஒன்று தீர்க்கப்படாத நீண்டகால பிரச்சனை அடுத்து அபிவிருத்தி இது இரண்டினையும் பெற்றுக்கொள்வதற்காக நாம் சேர்ந்து பயணிப்போம். கடந்த காலத்தில் எந்த அபிவிருத்தியும் வடகிழக்கில் காணமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை இருந்தது.

ஆனால் கடந்த அரசை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களைத்தான் தமிழ் தலைமைகளும் செய்தார்களே ஒழிய மக்களின் பிரச்சனைக்கான எந்தவொரு தீர்வையோ அபிவிருத்தியையோ பெற்றுகொடுக்க முடியாத நிலமையைத்தான் காணக்கூடியதாக இருந்தது. அதனல்தான் நான் கடந்த தேர்தலில் அரசுக்கு ஆதரவு வழங்கினேன். மக்களும் எமது மாவட்டத்தில் ஆளும்கட்சி சார்பாக இருவரை தேர்ந்து எடுத்துள்ளனர்.

தீர்க்கப்படாமல் இருக்கின்ற அனைத்து பிரச்சனைகளையும் எங்களது காலத்தில் தீர்த்து வைப்பதற்கான முயற்சியை நாம் செய்துவருகின்றோம் நிச்சயமாக செய்து கொடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!

சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக் கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது .இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.




# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

**மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya – 077 4898 773**


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் அடக்க இடமில்லை
# மாற்றுக்காணி கோரி மகஜர்



(ந.குகதர்சன், எச்.எம்.எம்.பர்ஸான் )

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களின் உடல்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் நில பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை தொடர்பாக கல்குடா தொகுதியிலுள்ள 69 அமைப்புகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பு இன்று வெள்ளிக்கிழமை ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜாவிடம் மகஜரினை செயலகத்தில் வைத்து கையளித்தனர்.

ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் நில பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதன் காரணமாக நல்லடக்க பணிகளை அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ள வேறு இடங்களுக்கு உடனடியாக மாற்றுமாறு கோரிக்கை விடுத்து கல்குடா தொகுதியிலுள்ள 69 அமைப்புகள் ஒன்றிணைந்து மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிலப்பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் ஓட்டமாவடி மஜ்மா நகரில் குறித்த காணி மாத்திரமே காணப்படுகின்றது. ஆனால் குறித்த பகுதியில் மக்கள் விவசாயம் செய்கின்றனர், குடியிருப்பாளர்களும் வசிக்கின்றனர். அத்தோடு கழிவு குப்பைகளும் கொட்டப்பட வேண்டும் என்பன விடயங்களை சுட்டிக்காட்டியும், கிண்ணியா வட்டமடு பகுதில் கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்ய 15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளதால் அங்கு அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

கல்குடா தொகுதியிலுள்ள 69 அமைப்புகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் கோரிக்கையினை மேற்கொள்ள துரித நடவடிக்கை மேற்கொள்வதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

கல்குடா தொகுதியிலுள்ள 69 அமைப்புகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் தலைவர் எம்.ரி.எம்.நிஸாரின் தலைமையிலான மகஜர் கையளிக்கும் நிகழ்வில் சட்டத்தரணி ஹபீப் றிபான், ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஐ.ஹாமித் சிறாஜி, ஏ.ஜீ.அசீஸுர் ரஹீம், மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் உட்பட உலமாக்கள், பள்ளிவாயல் நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கல்குடா தொகுதியிலுள்ள 69 அமைப்புகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பினால் ஓட்டமாவடி மஜ்மா நகரில் கொவிட்-19 பிரதேங்களை அடக்கும் செயற்பாட்டை நிறுத்தி வேறு அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு மாற்றுதல் தொடர்பில் வழங்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டதும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் பரிபாலனத்திற்கு கீழ் உள்ளதும் 210டீ காகித நகர் கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள அல்-மஜ்மாஹ் கிராமத்தில் கடந்த 05.03.2021ம் திகதியில் இருந்து கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த பிரதேங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இதுவரை 7 ஏக்கர் காணியில் 2975 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளரினால் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு 19/2021 ஆம் இலக்கமும் 10.09.2021ம் திகதியிடப்பட்டதுமான கடிதப்படி கொவிட் 19 ஜனாஸாக்களை நல்லக்கம் செய்யப்படும் காணியில் அடக்கம் செய்ய போதுமான காணிகள் இல்லை எனவும் மாற்று இடங்களை உடனடியாக தெரிவு செய்யுமாறும் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நல்லடக்கம் செய்யப்படும் காணிப் பற்றாக்குறை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் குறித்து எமது பிரதேசத்தின் சமூக மட்ட அமைப்புக்கள், புத்திஜீவிகள்;, உலமாக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பின்வரும் தீர்மானத்திற்கு வந்துள்ளனர். இது தொடர்பாக தங்களது மேலான கவனத்தை ஈர்க்கின்றோம்.

கொரோனா தொற்றால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பாக நாட்டில் அப்போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டும் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய வேண்டிய மார்க்கக் கடமையை நிறைவு செய்வதற்காகவும் எமது பிரதேசத்தில் ஆரம்பம் தொடக்கம் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்கு தொடர்ந்தும் நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம்.

மேலும் நல்லடக்க நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருப்பதனால் ஏனைய காணிகளையும் இதற்காக சுவீகரிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.இதனால் அதனை சுற்றியுள்ள மேட்டுநிலப் பயிர்ச் செய்கை நிலங்கள் மற்றும் வயல் பிரதேசங்களில் தமது விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது பல்வேறு அசௌகரியங்களுக்கு விவசாயிகள் முகம் கொடுத்து வருகின்றனர்.

எமது கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகமானது குறுகிய நிலப்பரப்புடன் அடர்த்தியான குடிசனப்பரம்பலைக் கொண்ட பிரதேசமாகும். பயங்கரவாத நடவடிக்கையின் போது மக்கள் இடம்பெயர்ந்து சாதாரண சூழ்நிலை ஏற்பட்ட போது மீள் குடியேடியறிய மஜ்மா நகர் காணியானது கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் ஒரேயொரு பொதுக் காணியாகும்.

இதில் திண்மக்கழிவு, ஒட்டுமொத்தக் கல்குடா முஸ்லிம் பிரதேசத்திற்கான பொது மையவாடிக் காணி, எதிர்கால இளம் சந்ததியினருக்குரிய குடியிறுப்புக்குமான எஞ்சியுள்ள ஒரேயொரு காணியாகும். எனவே குறித்த பிரதேச செயலகத்தின் காணிப்பயன்பாட்டில் குறித்த கொரோனா மரணங்களின் நல்லடக்க நடவடிக்கையானது குறித்த மஜ்மா நகர் கிராம பொதுமக்களின் இருப்புக்கும் பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது. குறித்த பகுதியில் கொவிட் பிரதங்களை அடக்குவதற்காக தங்களால் பல வருடங்கள் பராமரித்து வந்த 14 ஏக்கர் காணியை அப்பிரதேசத்திலுள்ள 14 சகோதரர்கள் இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது பிரதேசத்தில் சகல மதத்தினரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டு ஒரு மத நல்லிணக்கம் ஏற்பட்;டதனை நாங்கள் பாராட்டுவதோடு அதே போல் ஏனைய பிரதேசங்களில் சகல மதத்தினரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுவதனால் மத நல்லிணக்கம் ஏற்பட வழிவகுக்கும்.

கொரோனா தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதற்கு நாட்டில் பல்வேறு பொருத்தமான இடங்கள் அடையாளம் காணப்பட்ட போதும் இதுவரை வேறு எங்கும் நல்லடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு குறிப்பாக கிண்ணியா பிரதேசத்தில் வட்ட மடு பகுதியில் 15ஏக்கர் காணி வழங்கப்பட்டு நல்லடக்கம் செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம். எனவே மேற்படி காணிப் பற்றாக்குறைகளைக் கவனத்திற் கொண்டு காணி தொடர்பிலான அதிகாரமுள்ள உயர் அதிகாரி என்ற வகையில் பிரதேச செயலாளராகிய நீங்கள் எமது காணியில் மேற்கொள்ளப்படும் கோவிட்-19 ஜனாஸா நல்லடக்க நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி குறித்த கிண்ணியா பிரதேசத்திற்கு மரணித்த உடல்களை நல்லடக்க நடவடிக்கைக்காக அனுப்புவதற்கு உடனடியாக பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் கோவிட் உ வது இடைநிலை சிகிச்சை முகாம் திறப்பு



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கொவிட் 19 தொற்று நோய்க்கு உள்ளாகுவோருக்கான இரண்டாவது இடைநிலை சிகிச்சை முகாம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நறுவிலிக்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் உள்ளக விடுதியிலேயே இவ் சிகிச்சை முகாம் சுதேச வைத்திய அமைச்சின் நான்கு மில்லியன் ரூபா நிதி உதவியுடனும் பாதுகாப்பு படையினரின் மனித வலுவுடனே இவ் கொவிட் 19 தொற்று நோயாளருக்கான இவ் இடைநிலை சிகிச்சை நிலையம் அமையப்பெற்றுள்ளது.

மன்னார் தள்ளாடி 54வது படைபிரிவு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்சன விஜயசேகர, வட மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் திருமதி கணகேஸ்வரி ஜெபநாம கணேஷ்ணன், வட மாகாண சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் பி.செந்தில்நந்தனன், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.குணபாலன், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன், மருத்துவ அத்தியட்சகரும், மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளருமான வைத்திய கலாநிதி ஆர்.மணிவர்ணன் உட்பட பலர் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வியாழக்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ள இவ் சிகிச்சை முகாம் மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது முகாமாகவும் இது ஐம்பது படுக்கைகள் கொண்ட ஆண்களுக்கான சிகிச்சை நிலையமாகவும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இவ் சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டுள்ளபோதும் இவ் வைத்தியசாலைக்கு ஆயுள்வேத வைத்தியத்துக்கு வரும் வெளிநோயாளருக்கு எந்தவித பாதிப்பும் இல்லாதவாறு இவ் இடைநிலை சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் முதல் இங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை கொவிட் நோய்க்கு தடுப்பூசி பெறாமல் இவ் நோய்க்கு உள்ளாகுவோரும் இங்கு சிகிச்சைபெற அழைத்துவரப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயந்திரத்தைப் பயன்படுத்தி கூட்டெரு தயாரிக்கும் விழிப்புணர்வு



ரக்ஸனா

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின்கீழ் இயந்திரத்தைப் பயன்படுத்தி கூட்டெருதயாரிக்கும் செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும், முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அதன் மற்றுமொரு செயற்பாடு வெள்ளிக்கிழமை(24) மட்டக்களப்பு மவாட்டத்தின் அம்பிளாந்துறை விவசாயிகளுக்கு இயந்திரத்தைப் பயன்படுத்தி கூட்டெரு தயாரிக்கும் விழிப்புணர்வுச் செயற்பாடொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இயற்கையாகவே கிடைக்கும் இலைகுழைக்கள், சல்வீனியா, கிளிசறியா, மாட்டெரு போன்ற பலவற்றைப் பயன்படுத்தி இயந்திரத்தைக் கொண்டு கூட்டெரு தயாரிக்கும் முறை விவசாயிகளின் முன்னிலையில் தயாரித்துக் காண்பிக்கப்பட்டன.

கடுக்காமுனை விவசாயப் போதனாசிரியர் என்.பார்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் தட்சணகௌரி, மற்றும் ஏனை விவசாயப் போதனாசிரியர்களும் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சிகளையும், விளக்கங்களையும், வழங்கி வைத்தனர்.

# கல்முனை உவெஸ்லியில் உ பேருக்கு 9 ஏ சித்தி

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

நேற்று வெளியான க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகளின்படி கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இரு மாணவர்கள் சகலபாடங்களிலும் 9ஏ சித்தி பெற்று சாதனைபடைத்துள்ளதாக அதிபர் செ.கலையரசன் தெரிவித்தார்.

செல்வி ஜீவதாஸ் கம்சிகா செல்வி குணலிங்கம் தஸாரிகா ஆகிய இரு மாணவர்களே இவ்விதம் 9ஏ சித்தி பெற்றவர்களாவர்.

8ஏ 1பி சித்திபெற்று முரளிதரன் கோதமி அடுத்த நிலையிலுள்ளார்.

இதேவேளை இம்முறை எந்தவொரு மாணவரும் 9எவ் எடுக்கவில்லையெனவும் அதிபர் செ.கலையரசன் தெரிவித்தார்.

# கல்முனையின் பிரபல பாடசாலைகளில் சிரமதானம்

(வி.ரி.சகாதேவராஜா)

கொவிட் காலத்தில் கல்முனையின் பிரபல பாடசாலைகளில் அகற்றப்படாதிருந்த குப்பை கூழங்களை இன்று(24) சனிக்கிழமை அகற்றுவதற்கு கல்முனை மாநகரசபை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கல்முனை மாநகரிலுள்ள இரு பிரபல பாடசாலைகளில் கொவிட்காலத்தில் குப்பைகள் அகற்றப்படாதிருந்தமை தொடர்பாக பாடசாலை நிருவாகங்கள் மாநகரசபையில் முறையிட்டிருந்தும் பலனளிக்காமல் போனதான் காரணமாக கல்முனை மாநகரத்திற்கான மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனிடம் முறையிடப்பட்டது.

அவர் இதுவிடயத்தை கல்முனை மாநகரசபை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பரிடம் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு தெரியப்படுத்தினார்.

உண்மையில் இதுவிடயம் குறித்து தனக்கு இதுவரை தெரியாதென்றும் உடனடியாக அதாவது நாளை(25) சனிக்கிழமை அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

அதன்படி இன்று(25)சனிக்கிழமை நீண்டநாள்களாக தேங்கியிருக்கும் குப்பை கூழங்கள் அகற்றப்படவிருப்பதாகவும் பாடசாலைகள் தொடங்குவதற்கு இது இலகுவாகவிருக்குமெனவும் உறுப்பினர் ராஜன் தெரிவித்தார்.

# காரைதீவில் 49இந்துஆலயங்களின் அபிவிருத்திக்கென நிதியுதவி!



(காரைதீவு நிருபர் )

அம்பாரை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட காரைதீவு,சம்மாந்துறை, நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட 49ஆலயங்களின் அபிவிருத்திக்கான கொடுப்பனவு காசோலைகள் வழங்கும் நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் கொள்கை சட்டகமான சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின்கீழ் பிரதமரும் மற்றும் மதவிவகார அலுவல்கள் கலாசார அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களது வழிகாட்டுதலின்கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ,பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டதுடன் அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

39ஆலயங்களுக்கு கட்டுமானத்தேவைகளுக்காக தலா 1லட்சருபா, 10ஆலயங்களுக்கு அடிப்படைத்தேவைக்காக 90லட்சருபாவும் வழங்கப்பட்டது.

# திருகோணமலையில் 01 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோயில் வீதியில் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேக நபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து பொதி செய்யப்பட்ட நிலையில் 01 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், இன்றைய தினம் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கைத் தமிழர் பற்றியும் 13வது திருத்தம் பற்றியும்

# இந்தியா அதன் நிலைப்பாடுகளை அடிக்கடி மீளவலியுறுத்தி தெரிவித்து வந்திருக்கிறது

**ஸ்ரீராதா டத்தா, புதுடில்லியை தளமாகக் கொண்டிருக்கும் முன்னணி சிந்தனைக் கூடமான, விவேகானந்தா சர்வதேச நிதியத்தின், அயலக கற்கைகளுக்கான நிலையத்தின் தலைவராவார். விவேகானந்தா சர்வதேச நிதியம், ஆளும் பி.ஜே.பி அரசாங்கத்தின் கொள்கை சார் விடயங்களில் செல்வாக்குச் செலுத்தவல்ல முக்கிய சிந்தனைக் கூடமாகும்.**



**? யதீந்திரா : இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதி இரு கட்டங்களும் முன்னெடுக்கப்பட்டபோது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் சுமுகமானவையாக இருந்தன. ஆனால், 2009 மேயில் போர் முடிவடைந்த பிறகு உறவுகள் சுமுகமானவையாக இருக்கவில்லை. இந்தியாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட இரு நாடுகளுக்கும் இடையில் 'அதிகரித்துவரும் நம்பிக்கைப் பற்றாக்குறையை ஏற்றுக்கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாயம் ஒன்றின் அவசியம் பற்றி பேசியிருக்கிறார். இரு தரப்பு உறவுகளில் நெருக்கடியொன்று இருப்பதை அவர் சூசகமாக ஏற்றுக்கொள்கிறார். இந்தியாவின் அயலக கொள்கையில் ஒரு நிபுணர் என்ற வகையில் இவற்றையெல்லாம் நீங்கள் எவ்வாறு வியாக்கியானம் செய்கிறீர்கள்? ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாயம் ஒன்று பயன்தருமா?**

**ஸ்ரீராதா:** இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வெறுமனே போர்ப் பிரச்சினை காரணமாக மாத்திரமல்ல, பல்வேறு காரணங்களின் நிமித்தமும் அண்மைக்காலமாக சிறப்பானவையாக இருக்கவில்லை. என்றாலும், ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச பதவியேற்ற பிறகு, தனது முலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கே மேற்கொண்டார் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியது முக்கியமானதாகும். இது பரந்தளவிலான இந்திய - இலங்கை உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அதேவேளை, பயன்படுத்தப்படாதிருக்கும் பல வாய்ப்புக்கள் பற்றியும் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கிறது. இலங்கை வெளியுறவு செயலாளர் அட்மிரல் கொலம்பகேயும் இலங்கையின் வெளியுறவுக்கொள்கையில் 'இந்தியா முதலில்' அம்சத்தை மீளவலியுறுத்தியிருந்தார். அடிப்படையில் நோக்குகையில் இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு எதிராக கொழும்பு செயற்படவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். கூட்டு இராணுவ பயிற்சிகள் உட்பட பல இருதரப்பு திட்டங்களில் இந்தியாவும் இலங்கையும் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தீர்க்கப்படாத சில பிரச்சினைகள் நிச்சயமாக இருக்கின்றன.

ஆனால், இரு அயல் நாடுகளும் ஒன்றுக்கொன்று முக்கியமானவை. பல விவகாரங்களில் தொடர்ந்து நெருக்கமாக பணியாற்றுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, வெளியுறவுகள் விசை இயக்கமுடையவை. ஒவ்வொரு அரசாங்கமும் ஒரே மாதிரிச் செயற்படும் என்று எதிர்பார்ப்பது யதார்த்தபூர்வமற்றது. அதேவேளை, கடந்தகால செயற்பாடுகள் மற்றும் ஊடாட்டங்கள் ஊடாக நிறுவப்பட்டிருக்கும் ஒத்துழைப்புக் கட்டமைப்பை நிலைபேறானதாக வைத்திருக்கவேண்டிய முக்கியத்துவத்தை இரு நாடுகளின் தலைவர்களும் புரிந்துகொள்கிறார்கள். கடந்த கால நிகழ்வுப்போக்குகள் இரு தரப்பு உறவுகளில் தாக்கத்தைக் கொண்டிருக்கவே செய்யும். சில அரசாங்கங்கள் பழைய பிரச்சினைகளுக்கு வித்தியாசமான முறையில் பிரதிபலிப்பை வெளிக்காட்டும் ஒத்திசைவில்லாத போக்கை தற்காலிகமாக வெளிக்காட்டும். ஆனால், ஒட்டுமொத்த நிலைவரத்தைப் பொறுத்தவரை, எந்த தரப்புக்கும் பாதகம் ஏற்படுவதாக இல்லை.

ஒரு சில நம்பிக்கைப் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன.ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த மார்ச்சில் மனித உரிமைகள் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இந்தியா வாக்களிக்காமல் விலகியிருந்தது. இந்தியாவின் அந்த செயல் குறிப்பிட்ட ஒரு செய்தியைச் சொல்கிறது. கொவிட் பெருந்தொற்று நோயின் விளைவான நெருக்கடியில் இந்தியா இலங்கைக்கு உதவி செய்து ஆதரவளித்தது. 2021 முற்பகுதியில் கொழும்புக்கு இந்தியா ராடார் உபகரணத்தையும் வழங்கியதுஎவ்வாறெனினும், தீர்க்கப்படாமல் இருக்கும் இருதரப்பு பிரச்சினைகளை ஒத்துக்கொள்ளவேண்டும். அவற்றை கையண்டு தீர்த்துக்கொள்ளவேண்டும்.வேறுபட்ட சில நோக்குகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், தற்போதைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு பல்வேறு இராஜதந்திர மற்றும் உப தேசிய இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**? யதீந்திரா: இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனா ஊடுருவல்களைச் செய்து வருகின்றது. இந்த பின்புலத்தில், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கம் இந்தியாவுக்கு நல்லதல்ல என்ற அவதானிப்பு ஒன்று இருக்கிறது. இந்தியா பாரதூரமான பின்னடைவுகளைச் சந்திக்கிறதா? உங்களுடைய சிந்தனை என்ன?**

**ஸ்ரீராதா:** கடந்த தசாப்தத்தில் தெற்காசிய பிராந்தியத்தில் சீனாவின் ஈடுபாடு கவனத்தை ஈர்ப்பதாக இருந்து வருகிறது. சீனாவிடமிருந்து பெருமளவு பொருளாதார ஆதரவைப் பெற்றிருக்கும் அயல்நாடுகளில் இலங்கையும் ஒன்று. அது குறித்து சஞ்சலம் உண்டு. சீன -- இந்திய பகைமை மற்றும் அதிகரித்துவரும் சீன -- இலங்கை தோழமை ஆகியவற்றின் பின்புலத்தில் இந்தியாவுக்கு விரோதமான சில செயற்பாடுகள் எப்போதுமே சாத்தியம் என்ற நம்பிக்கை ஒன்றும் புதுமையானதல்ல. அது தவிர்க்கமுடியாததும் கூட.

கொழும்பின் சில அண்மைக்காலத் தீர்மானங்கள் சீனாவுக்கு அனுகூலமாக இருந்துவந்திருக்கின்ற அதேவேளை, அவற்றில் சில இந்தியாவின் நலன்களை மலினப்படுத்தியிருக்கின்றன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுடனும் ஜப்பானுடனும் சேர்ந்து இலங்கை 50--70 கோடி டொலர்கள் செலவில் அபிவிருத்தி செய்வதற்காக கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையை ரத்துச் செய்வதற்கு கொழும்பு எடுத்த தீர்மானத்துக்கு பிறகு இந்தியாவின் அச்சம் அதிகரித்தது. பொதுமக்களின் எதிர்ப்பை அதற்கு காரணமாக கூறிய இலங்கை மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு கொடுக்க முன்வந்தது. ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போன்று இது தனது பாதுகாப்பு அக்கறைகளைப் பாதிப்பதாக புதுடில்லி உணருகிறது.

மேலும், இது இந்தியாவும் இலங்கையும் 198% ஆம் ஆண்டில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் ஒரு மீறலாகவும் அமைந்தது. இலங்கையோ இந்தியாவோ ஒன்றின் ஐக்கியம், ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு மற்றையதன் துறைமுகங்கள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று அந்த உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் 24 மே 2021 இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. துறைமுகநகர திட்டம் இந்திய கரையோரத்தில் இருந்து 300 கிலோ மீட்டர்களுக்கும் குறைவான தூரத்திலேயே அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தூரம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மற்றும் பல இந்து சமுத்திர பிராந்திய அரசுகளுக்கும் தீர்க்கமான ஒரு இடைவெளியாகும். இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக, கொழும்பு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் இருக்கும் சிறிய தீவுகளில் 12 மில்லியன் டொலர்கள் செலவிலான மின்சக்தி திட்டத்தை, மூன்று புதுப்பிக்கத்தக்க சக்தி ஆலைகளாக கூட்டாக அபிவிருத்திசெய்வதற்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு கையளித்தது. இந்த தீவுகள் தமிழ்நாடு கரையோரத்தில் இருந்து 50 கிலோ மீட்டர்களுக்கும் குறைவான தூரத்தில் அமைந்திருக்கின்றன.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஊடாட்டம் துரிதமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அம்பாந்தோட்டையில் துறைமுக நிர்மாணம் உட்பட இலங்கைக்கு சீனா 700 கோடி டொலர்கள் கடனை வழங்கியிருக்கிறது. பெய்ஜிங்கிடமிருந்து பெற்ற கடன்களை இலங்கையினால் திருப்பிச்செலுத்த இயலாத காரணத்தால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன கம்பனியொன்றுக்கு 99 வருடகால குத்தகைக்கு கையளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் 2017 ஆம் ஆண்டில் கொழும்புக்கு ஏற்பட்டது. இதற்கு புறம்பாக, அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து பெற்ற ஐந்து கடன்களையும் இலங்கை திருப்பிச் செலுத்தவேண்டியிருக்கிறது. கொழும்பு எடுத்த தீர்மானங்களில் பல இலங்கையில் இந்திய நலன்களை மலினப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

**? யதீந்திரா: இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குமிக்க ஒரு காரணியாக தமிழ்நாடு விழங்குவதாக கூறப்படுகிறது. ஆனால், மத்தியில் தற்போது ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனாதா அரசாங்கம் பலமுடையதாக இருக்கிறது. மாநிலங்களின் அபிப்பிராயங்களினால் அது செல்வாக்கிற்கு உட்படுவது சாத்தியமில்லை. அதேவேளை, பாரதிய ஜனதாவுக்கு தமிழ்நாட்டில் கெட்டியான ஒரு ஆதரவுத்தளமும் கிடையாது. ஆனால், மீனவர்கள் பிரச்சினையிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் தமிழ்நாடு மத்தி மீது நெருக்குதலைப் பிரயோகிக்கிறது. முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் இந்தியாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்காக நலன்புரித் திட்டங்களை அண்மையில் அறிவித்தார். தமிழ்நாடு கொழும்புக்கு எதிரான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கிறது.இவையெல்லாவற்றையும் நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்? இந்திய -- இலங்கை உறவுகளை தீர்மானிப்பதில் தமிழ்நாட்டுக்கு செல்வாக்கு இருக்கிறதா?**

**ஸ்ரீராதா:** இந்திய சம்மேளனத்தில் டில்லியின் வெளியுறவுக்கொள்கை மீது சில செல்வாக்கை மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. ஆனால், நாட்டின் வெளியுறவுக்கொள்கை வகுக்கப்படும்போது வேறு காரணிகள் கூடுதல் செல்வாக்கு செலுத்துகின்றன. தமிழர் பிரச்சினை ஒரு முக்கியமான காரணியாக இருந்துவருகிறது. சகல இந்திய தலைவர்களுக்கும் அது தெரியும். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா அல்லாத ஒரு கட்சியின் ஆட்சியே இருக்கின்ற போதிலும் கூட தமிழர் பிரச்சினையை மத்திய அரசாங்கம் எப்போதும் அக்கறையுடன் அணுகுகிறது. மத்திய அரசாங்கத்தினால் சாத்தியமில்லாத குறிப்பிட்ட சில யோசனைகள் மற்றும் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மாநில அரசாங்கம் கொண்டிருக்கும் வாய்ப்புகளும் இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டிய அவசியத்தையும் அதிகாரப்பரவலாக்கல் உறுதிமொழியையும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் பலவற்றில் பிரதமர் மோடி எவ்வாறு முக்கியத்துவப்படுத்தி வந்திருக்கிறார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். மத்தியும் மாநில அரசாங்கங்களும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் தமிழர்களின் உரிமைகளும் பிரச்சினைகளும் இந்தியாவுக்கு முக்கியமானவை. மத்தியில் யார் ஆட்சியில் இருந்தாலும் இது முக்கியமான ஒரு விவகாரமாக நிலைத்திருக்கும்.

**சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஊடாட்டம் துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அம்பாந்தோட்டையில் துறைமுக நிர்மாணம் உட்பட இலங்கைக்கு சீனா 700 கோடி டொலர்கள் கடனை வழங்கியிருக்கிறது. பெய்ஜிங்கிடமிருந்து பெற்ற கடன்களை இலங்கையினால் திருப்பிச்செலுத்த இயலாத காரணத்தால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன கம்பனியொன்றுக்கு 99 வருடகால குத்தகைக்கு கையளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் 2017 ஆம் ஆண்டில் கொழும்புக்கு ஏற்பட்டது. இதற்கு புறம்பாக, அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து பெற்ற ஐந்து கடன்களையும் இலங்கை திருப்பிச் செலுத்தவேண்டியிருக்கிறது.**

**? யதீந்திரா: இலங்கையின் வடக்கு -- கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றி இந்தியா தொடர்ந்து பேசிவருகிறது. இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக வந்த 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையிலான அரசியல் இணக்கத் தீர்வொன்றில் இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. ஆனால், நடைமுறைப்படுத்தலில் முன்னேற்றம் இல்லை. தமிழ்த் தலைவர்கள் இது விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை நாடிநிற்கிறார்கள். தமிழர் பிரச்சினையில் பாரதிய ஜனதா அரசாங்கம் விசேட கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?**

**ஸ்ரீராதா:** இலங்கைத் தமிழர் பற்றியும் 13வது திருத்தம் பற்றியும் இந்தியா அதன் நிலைப்பாடுகளை அடிக்கடி மீளவலியுறுத்தி தெரிவித்து வந்திருக்கிறது. இலங்கையின் தற்போதைய தலைவர்களின் அறிக்கைகள் இது விடயத்தில் அவர்களிடம் காணப்படும் பிடிவாதத்தை வெளிக்காட்டுகின்றன. இன்னொரு நாடு வற்புறுத்துவதற்கோ செல்வாக்கு செலுத்துவதற்கோ மட்டுப்பாடுகள் உண்டு. ஆனால், இந்த விவகாரம் இந்திய நிகழ்ச்சி நிரலில் உச்சத்தில் தொடர்ந்து இருக்கிறது.

**? யதீந்திரா: ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கைகளில் மீண்டும் வீழ்ந்ததைத் தொடர்ந்து இந்து சமுத்திர பிராந்தியத்தில் நாடுகடந்த இஸ்லாமிய பயங்கரவாதத்தின் மீளெழுச்சிக்கான சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய நிகழ்வுப் போக்குகளினால் பாகிஸ்தான் மகிழ்ச்சியடைகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. தலிபான்கள் ஆப்கான் -- இந்திய நட்புறவு அணையையும் கைப்பற்றியிருக்கிறார்கள். தலிபான்களின் மீள்வருகை இந்தியா மீது எத்தகைய தாக்கத்தை கொண்டிருக்கும்? இது அயல்நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளில் எத்தகைய தாக்கத்தைக் கொண்டிருக்கும்?**

**ஸ்ரீராதா:** தற்போது காணப்படக்கூடியதாக இருக்கின்ற மூலோபாய மீள் அணிசேருகைகள் குறிப்பிடத்தக்க விளைவுகளைக் கொண்டிருக்கும். இது இந்தியா மீதும் பிராந்தியம் மீதும் பொதுவில் உலகம் மீதும் கடுமையான தாக்கத்தைக் கொண்டிருக்கப்போகிறது. அதைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லை. தலிபான் அரசாங்கத்தை ஆதரித்து பாகிஸ்தான் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை எந்தவித சந்தேகத்துக்கும் இடமின்றி அவர்களது மகிழ்ச்சியை வெளிக்காட்டுகிறது.

இந்தியா கவலைப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இஸ்லாமிய பயங்கரவாதத்தின் மீளெழுச்சி பற்றிய அச்சங்கள் யதார்த்தமானவை. மத அடிப்படைவாதிகளுக்கும் தலிபானுக்கும் இடையிலான தொடர்புகள் எமது பிராந்தியம் முழுவதையும் மோசமாகப்பாதிக்கும். இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் பாரதூரமான முரண்பாடுகளை தோற்றுவிக்கும். அது தவிர, ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியோடிவரும் மக்களுக்கு இந்தியா தஞ்சம் கொடுக்கிறது. சுமார் 300 கோடி டொலர்கள் முதலீட்டுடன் 34 மாகாணங்களிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கும் 400 சமூக உட்கட்டமைப்பு திட்டங்கள் ஊடாக ஆப்கானிஸ்தான் மக்களுக்கு வழங்கிய ஆதரவில் இந்தியா பல நன்மைகளை எதிர்பார்த்தது. கடந்த வருடம் இந்தியா 8 கோடி டொலர்கள் செலவில் சமூக அபிவிருத்தி திட்டங்களை அறிவித்தது. இத்திட்டங்களில் பல இப்போது அந்தரத்தில் தொங்குகின்றன. ஆப்கானிஸ்தானில் எதிர்காலம் மிகவும் நிச்சயமற்றதாக தோன்றுகிறது. இருந்தாலும் வரும் நாட்களில் வேறுபல நடவடிக்கைகள் ஊடாக ஆப்கான் மக்களுக்கு இந்தியா ஆதரவைத் தொடரும். முன்னுணர்ந்து இப்போதைக்கு எதையும் கூறமுடியாது. ஆனால், ஆப்கானிஸ்தானுக்கு தலிபான்களின் வருகை பல மீள் அணிசேருகைகளை ஏற்படுத்தப்போகிறது என்பது மாத்திரம் நிச்சயம்.

**நன்றி**

**மூலோபாய கற்கை நிலையம் - திருகோணமலை இணையத்தளத்திலிருந்து**

**யதீந்திரா:**

# எனது சகோதரன் எம்.எச்.எம். அஷ்ரபுக்கு பழிவாங்கும் எண்ணம் அறவே இருக்கவில்லை

## சட்டத்தரணி பெரோஸா ஹுஸைன்

மறைந்த பெரும் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் 21 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இணையவழியூடாக (ZOOM), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில், அவரது நினைவு தினத்தன்று (16.9.2021) இடம்பெற்றபோது, சட்டத்தரணி பெரோஸா ஹுஸைன் பகிர்ந்துகொண்ட தனது சகோதருடனான நினைவலைகள்.

சிறந்த கவிஞரும் சிறுகதை எழுத்தாளருமான இவர், முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசும், சவூதி அரேபியா, ஜித்தாவுக்கான இலங்கையின் முன்னாள் கொன்ஸலர் ஜெனரலுமான ஏ,டபிள்யூ.ஏ. ஸலாமின் துணைவியாராவார்.

செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி ,எனது உடன் பிறந்த சகோதரர் எம்.எச்.எம். அஷ்ரப் எம்மை விட்டும், இந்த மண்ணை விட்டும் மறைந்து இருபத்தோராவது வருடம். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரின் வாழ்க்கைப் புத்தகத்தின் சில பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பது என் கடமை என்று நினைக்கிறேன்.

என் சகோதரர் தனது இளமைக்காலத்தில் மிக இளகிய மனமுடையவராகக் காணப்பட்டார். ஏழைகளுடன் மிகவும் அன்புடன் பழகி வந்தார். கோள் , புறம், பொய் பேசுவதை வெறுத்தார்.அவ்வாறு பேசத் தொடங்கும் போதே அது தாயாக இருந்தால் என்ன, தங்கையாக இருந்தால் என்ன அது வேறு ஒருவர் பற்றிய பேச்சாக இருப்பின் அந்தப் பேச்சை அப்படியே நிறுத்தச் சொல்வார். அதனை தொடர விடமாட்டார்.




அவரது ‘நான் எனும் நீ’ என்ற கவிதைத் தொகுப்பில் ‘தங்கையே’ என்ற ஒரு கவிதை உள்ளது. அதன் ஒரு பகுதி,

பொய்யை இறைக்காதே தங்கையே!
பொறுமை கொண்டிரு தங்கையே!
மெய்யை உரைத்திடு தங்கையே!
மேன்மை பெறலாம் தங்கையே
கள்ளம் அகற்றிடு தங்கையே
இப்படி அந்தக் கவிதை செல்கின்றது.

இந்தக் கவிதையை ‘நான் எனும் நீ’ என்ற நூலில் பிரசுரிக்கத் தயாரான போது,

‘இது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?’ என்று என்னிடம் கேட்டார்.

நான் ‘இல்லை’ என்றேன்.

‘நீங்கள் சின்ன வயதில் நான் எழுதியது மறந்துவிட்டீர்களா ? ’ என்றார். அப்போதுதான் எனக்கு அது ஞாபகத்தில் வந்தது. அவரின் நினைவாற்றல் அற்புதமானது. அல்ஹம்துலில்லாஹ் .

எங்கள் குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள். எங்களில் 5 பேர் சிறு வயதிலேயே மரணித்துவிட்டனர். மீதி நான்கு பேரில் அவர் மட்டும்தான் ஆண் பிள்ளை. எல்லோரும் எனக்கு மூத்தவர்கள். ‘சாண் பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை’ என்பார்கள். அதனால் என் பெற்றோரின் அரிய பொக்கிஷமாக அவர் வளர்க்கப்பட்டார். பாசம், பணிவு, பொறுமை, கடமை போன்ற அத்தனை நற்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவராக அவர் வளர்ந்தார். அவரின் சிறுவயதிலேயே அவரின் நற்குணங்கள் நன்றாக வெளிப்பட்டன என எனது தாய் அடிக்கடி கூறிப் பெருமைப்படுவார்.

அவர் சிறுவயதில் கடைக்குச் செல்லும் போதும் கூட , அடுத்தவர் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் வாங்கிக் கொடுத்து விட்டே வருவார் என எனது தாயார் அடிக்கடி சொல்வார். கல்வியிலும், விளையாட்டிலும் ,கலை உணர்வுகளிலும் சமமாகக் காணப்பட்டார். அவரின் திறமைகளை நான் சொல்வதிலும் பார்க்க நீங்கள் அதிகமாக அறிந்திருப்பீர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இருக்க முடியாது.

பெற்றோருடனும் சகோதரிகளுடனும் அளவற்ற பாசம் கொண்டிருந்தார். ஒரு தந்தையைப் போன்று எங்களிடம் அன்பு காட்டினார். அதேபோல் தனது குடும்பத்தார் மகன் அமான், மனைவி ஆகியோர் மீது உயிரையே வைத்திருந்தார். ஒருவரைப் பற்றி அறிய வேண்டுமானால் அவரின் நண்பனைப் பற்றி அறி என்று சொல்வார்கள். என் சகோதரரின் நண்பர்கள் அத்தனை பேரும் மிகுந்த திறமைசாலிகள். நற்பண்புள்ளவர்கள். அவருக்கு எத்தனை முஸ்லிம் நண்பர்கள் இருந்தார்களோ, அதேபோல் அத்தனை இந்து கிறிஸ்தவ நண்பர்களும் இருந்தார்கள்.

அவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். எங்களுடன் உடன்பிறந்த சகோதரர்களைப் போல் பழகுவார்கள். அவர்களிடத்தில் எந்தவொரு இன, மத, மொழி, வேறுபாட்டையும் நான் அன்று காணவில்லை. அவரின் இறப்பு வரைக்கும் அவர்களுடன் எனது சகோதரன் தன் நட்பைப் பேணிக் கொண்டேயிருந்தார். இப்போதும் கூட, அவர்கள் எனது சகோதரரை நினைவு கூர்ந்த வண்ணம் கண் கலக்குகின்றனர்.

பெண்களின் கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். நான் உயர்கல்வி கற்க ஆசைப்பட்ட போது மிகவும் சந்தோஷப்பட்டார். எனக்கு சட்டக் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் ஒரே நேரத்தில் அனுமதி கிடைத்த போது ‘அவற்றில் எதைத் தெரிவு செய்யப் போகிறீர்கள்?’ என்று கேட்டார் எனது சகோதரர். ‘இரண்டையும்’ என்றேன் ‘இரண்டையுமா? எப்படி?’ என்றார். ‘என்னால் இயலும்’ என்றேன். ‘எதையும் சவாலாக ஏற்றுக் கொண்டால் இறைவன் துணையுடன் முடிக்கலாம்’ என்று சொல்லி சந்தோஷப்பட்டார். இரண்டும் வேறு வேறு துறைகள் ஆன போதும் நான் அந்த சவாலை ஏற்றுக்கொண்டு என் கல்வியைத் தொடர்ந்த போது மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அதற்கு ஊக்கமளித்து உதவியும் செய்தார்.

நான் சட்டத்தரணியாக வெளியேறிய மறுநாளே என்னை கல்முனை நீதிமன்றத்துக்கு பெருமையுடன் அழைத்துச் சென்றார். பல வருடங்கள் அவருடன் சேர்ந்து பணியாற்றிய பாக்கியம் பெற்றவள் நான். சட்டத்துறையில் என் வழிகாட்டியாக இருந்தார். என்னைப்போல் இளம் சட்டத்தரணிகள் அதிகமானோர் அவரிடம் தொழில் பயின்றார்கள். அவரிடம் வேலை பழகிய சட்டத்தரணிகள் பலர், பிற்காலத்தில் புகழ் பெற்ற நீதிபதிகளாகவும் சட்டத்தரணிகளாகவும் கடமையாற்றுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் 10 அல்லது 15 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி. கல்முனைக்குடியில் இருக்கும் எனது தாய் வீட்டில் தான் அந்தக் கட்சி பிறந்து வளர்ந்தது. அதனை வளர்ப்பதற்காக அவர் செய்த தியாகங்களும், என் பெற்றோரின் உறுதுணையும் எங்கள் குடும்பம் அடைந்த அவமானங்களும் கூட சொல்லிலடங்காது.

ஆரம்பத்தில் ஒரு சிலர் என் சகோதரரின் முகத்தில் காறித் துப்பினார்கள். அந்த உமிழ் நீரை தன் முகத்தில் கொட்டியவர் மீது சற்றும் சினம் கொள்ளாது, தன் கரங்களாலேயே அதைத் துடைத்தபடி மருதமுனையில் இருக்கும் என் சகோதரியின் வீட்டுக்கு வந்தார் என் சகோதரர். அப்போது நானும் எனது தாயும் அங்கிருந்தோம். தனக்கு நடந்ததைச் சொன்னதும் எனது தாய் வாய்விட்டு அழுதார். ‘ஏன் மகன் உனக்கு இந்த நிலை?, இப்படி ஒரு அரசியல் உனக்கு தேவைதானா? ’ என்று கேட்டார். அதற்கு அருகில் இருந்த அவரை அணைத்தவாறே , ‘இது ஆரம்பம் தான். இது போல எவ்வளவோ எச்சில்களையும் குப்பைகளையும் தாங்க வேண்டியிருக்கும் உம்மா’ என்று கூறிய போது எங்களால் அதனை ஜீரணிக்க முடியவில்லை.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் முதன்முறையாகப் போட்டியிட்டது. அப்போது மருதமுனையில் ஒரு வாக்குச்சாவடிக்குச் சென்ற அவர் மீது அங்கிருந்தவர்கள் சிலர் கதிரைகளையும், வேறு பொருட்களையும் வீசி எறிந்தார்கள். அவர் அதைச் சகித்துக் கொண்டார். தனக்கு ஏற்பட்ட அவ்வளவு துன்பங்களையும் தன் மரணம் வரை சகிப்புத்தன்மையுடன் எதிர் கொண்டார். அவர் தேர்தலில் வென்ற பின்னர் யார் யார் அவரைத் தூற்றினார்களோ, துப்பினர்களோ, அவமதித்தார்களோ அவர்கள் அத்தனை பேரும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள் ; அரசியல் இலாபங்களை அனுபவித்தார்கள். எனது சகோதரனுக்கு பழிவாங்கும் எண்ணம் அறவேயிருக்கவில்லை. யாரையும் வஞ்சிக்கும் எண்ணமும் இருக்கவில்லை. எல்லோரையும் அரவணைத்துக் கொள்வார். அவரின் மனப்பக்குவம் எவருக்கும் இலகுவில் வராது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு உயர்ந்த சொர்க்கத்தை வழங்குவானாக!

என் சகோதரனின் இலக்கிய வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், நிறையக் கதைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். அதிலும் கவிதை எழுதுவதில் அதிக ஆர்வம் உள்ளவராகக் காணப்பட்டார். தனக்கு மிகவும் பிடித்த கவிஞரான பேராசிரியர் கவிஞர் எம்.ஏ.நுஃமானிடத்தில் கவிதைகளை முதலில் காட்டுவார். நுஃமான் என் சகோதரரின் கவிதைகளைப் படித்த பின் அதன் சிறப்புகளையும், குறைகளையும் எடுத்துச் சொல்வார். அதேபோல கவிஞர் ஈழமேகம் பக்கீர் தம்பி என் சகோதரருக்கு உறுதுணையாக இருந்தார். அவர் ஒரு பெரும் கவிஞர் ஆவார். அவர் எங்கள் சாச்சா முறையானவர். இவர் எனது சகோதரரின் கவிதைகளை சிறுவயதில் பத்திரிகைகளுக்கும் அனுப்பி ஊக்கமளித்தார்’.மகன்’ என்று அன்புடனும் உரிமையுடனும் அழைத்தார். கவிஞர் ஈழமேகம் பக்கீர் தம்பி, எனது சகோதரருக்காகப் பாடிய ‘வண்ணத்தமிழ் பேசு’ என்ற கவிதையை நான் இங்கு பதிவிட விரும்புகிறேன். இதோ அந்தக் கவிதை:

காத்திருந்த என் கரத்தில்
கரும்பு வழிச் சாறு பிழிந்து பார்த்திருந்த
என் எதிர் கண் பாவை
மலர் தேன் சிந்த
வார்த் தெடுத்து
வடித்தெடுத்து
வண் தமிழில்
கோர்த்தெடுத்து

ஆர்த்த அழி
மொய்த்த மலர்
அழகு கவி
நீ மொழிந்தாய்.

பார்த்ததுமே என் இதயம்
பாகாய் உருகி விட ,
பூத்ததடா
கண்மணியே
பூரித்த என் உடலம்.

வேர்த்தடா உன்
கவியின்
வேகத்தைத்
தாங்காமல்

சோற்றுக்கும்
கூழுக்கும்
சொன்னாள் கவி
ஔவை
காற்றில் மிதந்த
கடிதம்
வரைந்தளித்தாய்.

சேற்றில்தான் நட்டாலும்
செழித்து வளருமடா
ஆற்றல் செறிந்த
மகன் அஷ்ரப்
நீ அளித்த கவி.

ஆயிரத்தில் நீ ஒருவன்
அழகுத் திருத் தமிழ்
கவிஞன்
பாயிரத்தில் காணா
பண்புக் கலையார்வம்
நீ ஒருத்தன்
பெற்று நினைத்தால்
அது எனக்கு
ஆயிரமோ கோடியோ
அதிலும்
பெரு மகிழ்ச்சி.

சே! இதற்கா
என்று சிரித்தேன்
கவி மகனே!
வாயிருக்கு மட்டும்
வண்ணத்தமிழ் பேசு.

அல்லாஹ்வின் அருளால் அவருக்கு இருக்கும் உயர்ந்த நினைவாற்றலும் நன்றி மறவாத மனப்பான்மையும் பிறருக்கு உதவி செய்யும் குணமும் அவரை இந்த மண்ணில் வளம் மிக்க மனிதனாக ஆக்கிச் சென்றது. அப்போதுதான், ‘நீ வாழ்ந்ததும் செய்ததும் போதும் . இனி என்னிடம் வந்துவிடு’ என்று அவருக்கு இறைவனின் அழைப்புக் கிடைத்தது.

‘இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்’

ஒரு தாய்க்கு தன் மகன் கண் முன்னே மரணித்துவிட்டால் அந்த வலி எவ்வளவு மிகுந்தது என்பதை நானும் அறிவேன்: என் தாயும் அறிந்தார்.

எந்த நேரமும் சிரித்த முகத்துடன் இருக்கும் எனது தாய், தன் மகனைப் பிரிந்த ஒன்றரை வருடங்கள் அழுத கண்களுடனும்,நிறைந்த துயருடனும் மகனுக்காக சதா பிரார்த்தித்த வண்ணமே காணப்பட்டார். உயிருடன் இருந்தபோது ஒவ்வொரு நாளும் எனது சகோதரர் என் தாயைப் பார்க்க எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் பின்னால் நிறைய அவரது ஆதரவாளர்கள் வருவார்கள். என் தாயோடு பேசுவார்கள். ஆனால், அவர் மரணத்த பின்னர் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரே வந்தனர். அது ஒரு வேதனை மிகுந்த காலம். மகனின் மௌத்துக்குப் பின்பு ஒருவரையும் காணவில்லை. ‘அவர் வந்தாரா? இவர் வந்தாரா? ’ என்று எனது தாய் கேட்டுக் கொண்டே இருப்பார். ஆனால், பெரிதாக யாரும் வரவில்லை.

### பழமரம் இல்லாதபோது பறவைகளுக்கு என்ன வேலை?

எனது தாய்க்கும் இயற்கையான கவிப் புலமை அதிகம். அவருக்கு எழுதத் தெரியாது. ஆனால், கிராமிய கவிதைகளை அவர் வாயால் சொல்லக் கேட்டிருக்கிறோம். என் சகோதரன் என்னிடம் அவற்றை எழுதித் தருமாறு வேண்டிக் கொண்டார். அவற்றை புத்தகமாகத் தொகுத்து வெளியிட அவர் விரும்பினார். நானும் எனது தாய் கூறக் கூற அவற்றை முழுவதுமாக எழுதி சகோதரரிடம் ஒப்படைத்தேன். அதன்பின் சில மாதங்களில் என் சகோதரரின் மரணம் நிகழ்ந்துவிட்டது ; அத்துடன் அவரது முயற்சியும் நின்றுவிட்டது.

குடும்ப உறவுகளை எனது சகோதரர் மிகவும் பேணி வளர்க்க உறவினரை இனம் காட்டிச் சொல்லித்தந்தார். என் சகோதரர் தாய் தந்தையின் ஆதி மூலங்களைத் தேடி ‘பெமிலி ரீ’ என்று மரம் ஒன்றைக் கீறி அதில் உறவுகளின் பெயர்களைப் பொறித்து வைத்திருந்தார். அவர்களை சந்திப்பதிலும் உரையாடுவதிலும் மகிழ்ச்சி கொண்டார். எவ்வளவு முக்கியமான வேலையாக இருந்தாலும் மற்றவரின் பேச்சுக்கு மரியாதை கொடுத்து பொறுமையுடன் கேட்பார். எல்லோரையும் அழைத்து அடிக்கடி விருந்து கொடுப்பதை வழக்கமாக்கி, அதில் மகிழ்ச்சி அடைந்தார். என் தாயாருடன் அதிக நேரத்தைச் செலவிட்டார்.. தாயின் நகைச்சுவைப் பேச்சில் அவரும் சேர்ந்து மகிழ்வார். தனது ‘நான் எனும் நீ’ நூலில் எனது தாயை ‘சொர்க்கத்தின் பேரரசி’ என்று வர்ணிக்கிறார். என் தாயிடம் இருந்து விடைபெறும் போது , அவரிடம் ஒரு பழக்கம் இருந்தது. தாயின் பாதங்களை தனது தலைமேல் தூக்கி வைத்து முத்தமிட்ட பின்பே அவர் விடைபெறுவார். அது ஒரு பொற்காலம்.

வாழ்க்கையில் எத்தனையோ பேரை இழக்கிறோம். பலரின் இழப்புகள் அவரது குடும்பத்தினருக்கு மட்டும் தான் கவலையையும் நஷ்டத்தையும் கொடுக்கிறது. சிலரின் மரணங்கள் மட்டும் முழு சமுதாயத்திற்கும் இழப்பாகவும் துயராகவும் அமைந்து விடுகிறது. அத்தகைய ஒரு மரணம் தான் என் சகோதரரின் மரணம். இன்னும் அந்தத் துயர் ஓயவில்லை. இந்த மரணத்தையிட்டு அவர் தன் ‘நான் எனும் நீ’ என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்: ’இங்கிருந்து நாம் விடும் ஒவ்வொரு மூச்சும் இறப்பினையே நோக்கி வைக்கும் அடிகளாகும். சேவை சதா செய்யாமல் இருப்போரை செத்த இழிப் பிணங்களுடன் நாம் சேர்க்க வேண்டும்.

சேவை நிதம் செய்வோரே இறந்தும் வாழ்வர்’ என்கிறது அவரின் கவிதை.

ஆகவே, இருக்கும் காலத்தில் சேவை செய்து வாழ்வதே மனிதனின் குறிக்கோள். இதுவே அவரது ஆவலும் கூட!

ஆம்! மரணத்தின் பின்னும் எனது சகோதரர் உங்கள் மனதில் நிறைந்து இருக்கின்றார். அவர் மரணத்தைப் பற்றி என்றும் பயப்பட்டதில்லை. இதற்குச் சான்றாக ஒரு சம்பவத்தைக் கூற நினைக்கிறேன்.

மரணிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் எங்களிடம் வந்தார். என் கணவர் மீது மிகுந்த அன்பும் பாசமும் வைத்திருப்பதால் அவரோடு மனம் திறந்து பேசுவது என் சகோதரரின் வழக்கம். எனவே, அவர் இவ்வாறு கூறினார்:

‘என்னைக் கொலை செய்வதாகப் பயமுறுத்துகிறார்கள். நான் இவர்களுக்கோ அல்லது மரணத்துக்கோ பயப்படவில்லை. மரணம் எப்போதும் எல்லோருக்கும் வரக்கூடிய ஒன்றுதான். ஆனால், என்னை இவர்கள் விரைவாக இறைவனிடம் அனுப்பப் பார்க்கிறார்கள். இறைவனை மற்றவர்கள் சந்திக்க முன்பு நான் சந்திக்கப் போவது எனக்கு மகிழ்ச்சிதான்’ என்று சொன்னபோது, நான் வாய்விட்டு அழுதுவிட்டேன்.

இறுதியாக, என் சகோதரனின் மரணத்தைப்பற்றி எல்லோரும் துயர் அடைந்தாலும் என் தாயை தவிர, வேறு யாருமே அது பற்றி போதியளவு வினாத் தொடுக்கவில்லை. என் தாய் மட்டும் மகனுக்கு என்ன நடந்தது என்று கேட்டுக்கொண்டே இருந்தார். ‘இதே போன்று வேறு ஒருவருக்கு நடந்து, என் மகன் உயிரோடு இருந்திருந்தால், நிச்சயமாக அதைப்பற்றிக் கேட்டிருப்பார்களே ஆனால், என் மகனைப் பற்றி யாராவது வாய் திறக்க மாட்டார்களா? ’ என்று வேதனையைக் கொட்டிக் கொண்டிருந்தார். எத்தனையோ வழக்கறிஞர்கள் என் மகனிடம் பயின்றும் ஒருவருக்காவது இது பற்றிக் கேட்க முடியாதா? என்று அழுதுகொண்டே இருந்தார்.

அந்த நாட்களில்தான் ஒரு நாள் ரவூப் ஹக்கீம் எம்.பி. எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரிடம் என் தாய் தன் ஆதங்கத்தை முறையிட்டபோது, அவர் அதனைச் செவிமடுத்தார். அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்து அவர் மூலம் ஓர் ஆணைக்குழுவை நியமிக்க ஏற்பாடு செய்தார். அதன் நடுவராக ஓய்வு பெற்ற மேல் உயர் நீதிமன்ற நீதிபதி லக்ஷ்மன் வீரசேகர கடமையாற்றினார். அரசு தரப்பில் சட்டத்தரணிகள் சிலர் மட்டுமே வாதாடினர். அவர்களோடு நான் மட்டுமே எனது சகோதரர் சார்பில் மூன்று மாதங்கள் தினமும் சென்று வந்தேன்.

அந்த மரணத்தை ஆராய அனுபவம் வாய்ந்ததொரு சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவர் தேவைப்பட்டார். எனது சகோதரரின் சட்டத்தரணி நண்பர்களோ, அவரிடம் வேலை செய்தவர்களோ யாருமே முன்வரவில்லை. இந்த நிலையில்தான் என் கணவர் , ரவூப் ஹக்கீம் எம்.பி.யிடம் தாயாரின் இந்தப் பிரச்சினையை எடுத்துரைத்தார். உடனடியாக அவர் காலம் சென்ற ஜனாதிபதி சட்டத்தரணி இக்பால் முஹம்மதைத் தொடர்பு கொண்டு அதில் வாதாட வைத்தார். இந்நிலையில் ரவூப் ஹக்கீம் எம்.பி.யின் உதவியை நினைவு கூர்ந்து இங்கு நன்றி பகிர்கிறேன்: மிக்க நன்றி! அத்துடன் இந்த வழக்கை தொடர்ச்சியாகப் பங்கெடுத்து இலவசமாக வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி மர்ஹூம் இக்பால் முஹம்மதுக்கு எனது பிரார்த்தனைகள் என்றும் உண்டு என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் எனது சகோதரருக்கு மறுமையில் நல்லருள்புரிய வேண்டுகிறேன். இந்த நிகழ்வில் பங்கேற்றிருக்கும் அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துக்களையும் , ஸலாத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் .


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen

Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்

வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.

இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen

Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com




# எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரக்கூடியவர் நாமல் ராஜபக்ஷ - பிரசாந்தன்



(ரக்ஸனா)

எமது தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனூடாகவும், எதிர்காலத்தில் இந்த நாட்டின் தலைவராகவும், ஜனாதிபதியாகவும் வரக்கூடிய ஒரு இளைஞர் நாமல் ராஜபக்ஸ அவர்களூடாகவும், அவர்களின் கரங்களைப் பலப்படுத்தி இந்த மாவட்டத்தையும், மாகாணத்தையும் வலுவானதாகக் கொண்டு வருவதற்கு அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும். தமிழர்கள் தலை நிமிர்ந்து தடம் பதிப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூபால பிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் 1.5 நிதி ஒதுக்கீட்டின் கீழ் புணரமைக்கப்பட்ட கோட்டைக்கல்லாறு கிழக்கு பொது விளையாட்டு மைதானம் வியாழக்கிழமை மாலை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜகப்ஸ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கடியில்

கொரோனா அச்சத்தின் மத்திக்கத்திலும். நாட்டில் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், சமூக இடைவெளிகளைப் பேணிக் கொண்டு பல்வேறு அச்சத்தின் மத்திக்கத்திலும், அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலமையிலும், நமது நாடு மாத்திரமல்லாமல் சர்வதேசமே பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலும், ஜனாதிபதி கோட்டபாஜ ராஜபக்ஸ, மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டில் அபிவிருத்திகள் இன்னும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

அதன் ஒரு அங்கமாகத்தான் அமைச்சர் நாமல் ராஜபக்ஸ அவர்கள் மட்டக்களப்பு மவாட்டத்தின் வைத்தியசாலை, விளையாட்டு மைதானங்கள், உள்ளிட்ட பல இடங்களுக்கு விஜயம் செய்து அபிவிருத்தித்திட்டங்களைப் பார்வையிட்டுள்ளார். ஆனால் தொடர்ந்தும் வெறும் வார்த்தைப் பிரயோகங்களைச் சொல்லிக் கொண்டு 62 வருடங்களாக தமிழர்களை எவ்வாறு ஏமாற்றிக் கொண்டிருந்தார்களோ, அதுபோல் எதிர்க்கட்சி அரசியல் செய்பவர்களும், தொடர்ந்து இந்த அரசை விமர்சனம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இந்த இடம் மிகவும் அழகான இடம், இந்த மைதானத்தைச் சுற்றி நடைபாதை அமைத்து தருகின்றேன், சுற்றுலாத்துறையூடாக இதனை வளப்படுத்தித் தருகின்றேன் என அமைச்சர் நாமல் ராஜபக்ஸ அவர்கள் தெரிவித்துள்ளார். இதுதான் எமக்குத் தேவை இதுதான் ஒரு நாட்டின் தலைமைத்துவத்துக்கான இலச்சணமாகும்.

மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்களோ அதனைப் பெறுவதற்குரிய தலைமைத்துவத்தைத்தான் நமது நமது நாடு பெற்றிருக்கின்றது. இதனை விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டே இருக்கட்டும், 62 வருடங்களாக விமர்சித்தோம் எது நடந்தது. இன்னும் விளையாடுவதற்கு இந்த கோட்டைக்கல்லாற்றில் இல்லாமலுள்ளது, சிறந்த விளையாட்டு மைதானம் இல்லாமல் இந்த பட்டிருப்பு பிரதேசத்தில் இல்லாமலுள்ளது. இந்த நிலமையை நாங்கள் மாற்ற வேண்டும். எமது தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் சிறையில் இருக்கின்றபோதுதான் கோட்டைக்கல்லாறு மைதானத்தின் புணரமைப்புக்கு நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார். இதுபோல் இன்னும் இப்பிரதேசத்தில் இன்னும் பல அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குரிய காலம் கனிந்துள்ளது அதற்காக நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எமது பகுதியில் விளையாட்டில் மிகுந்த திறமையான இளைஞர்கள் இருக்கின்றார்கள். அதற்கு போர்க்களத்தில் களமாடிய இளைஞர்கள் தற்போது அவர்களது பொருளாதாரத்திற்காகவும், வாழ்க்கையை வலுவாக்குவதற்காகவும், வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக மாற்ற வேண்டும் எமது மாணவர்களின் கல்வி நிலமையை உயர்த்த வேண்டும். இளைஞர்களின் விளையாட்டுத்துறையை வலுவாக்க வேண்டும். கணவனை இழந்து வீடுகள், மலசலகூடம் இல்லாமல் பல்வேறு பிரச்சனைகளுடன் வாழ்ந்து வருபவர்களுக்குரிய தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக எமது தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனனூடாகவும், எதிர்காலத்தில் இந்த நாட்டின் தலைவராகவும், ஜனாதிபதியாகவும் வரக்கூடிய ஒரு இளைஞர் நாமல் ராஜபக்ஸ அவர்களூடாகவும், மேற்கொள்வதற்கு அவர்களின் கரங்களைப் பலப்படுத்தி இந்த மாவட்டத்தையும், மாகாணத்தையும் வலுவானதாகக் கொண்டு வருவதற்கு அனைவரும் இணைந்து பாடுபடவேண்டும். தமிழர்கள் தலைநிமிர்ந்து தடம் பதிப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# 37 வருட கல்விச் சேவை பாராட்டு விழா

(எம்.ஐ.எம்.றியாஸ்)



37 வருட கல்விச் சேவையில் இருந்து இன்றுடன் (25.09.2021 ) ஓய்வு பெற்றவுள்ள அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல். எம்.லாபீர் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் சுவடு என்ற மலர் வெளியிட்டு வைக்கும் வைபவமும் நேற்று முன்தினம் (23.09.2021) வியாழக்கிழமை அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கலந்து கொண்டு லாபீரின் அர்ப்பணிப்புகளுடனான கல்விப் பணியைப் பாராட்டி உரையாற்றி அவருக்கு பொன்னாடை போர்த்தியும் நிறைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக தனது பணியை மிகவும் சிறப்புடன் ஆற்றிய இவர், இந்த கல்வி சமூகத்திற்கு முன்மாதிரியாக திகழ்ந்து மாணவர்களின் முன்னேற்றத்திற்கு சேவையாற்றிய நன்மதிப்பை பெற்றவராவார்.

இந் நிகழ்வில் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.பஸ்மில், உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், உட்பட கல்வி அதிகாரிகள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந் நிகழ்வு நடைபெற்றது.

# திருகோணமலை கருமலையூற்று கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம்

(இஃஜாஸ் ஏ பரீட்)



திருகோணமலை மாவட்டத்தில், முழுவதும் அண்மைக் காலங்களாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் வழங்கப்படும் குடி நீர் விநியோகம் தடைபட்டதனால் பல கிராம மக்கள் குடிநீரை பெற்றுக் கெள்வதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இது குறித்து கருமலையூற்று கிராம மக்களின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம். நௌபரின் முயற்சியின் மூலம் பிரதேச சபையின் பங்களிப்புடன் பவுசர் மூலம் குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் தமது நன்றியை உப தவிசாளர் தெரிவித்துள்ளார்.



# சீருடை வழங்கல்

(எம்.ஐ.எம்.றியாஸ்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் கிரிகெட் அணிக்கு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களை அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலையின் முன்னாள் பொது வைத்திய நிபுணர் அஹ்மத் பரீட் அவர்களின் அனுசரணையில் வழங்கி வைக்கப்பட்டது.

அக்க்கரைப்பற்று ஜீ.எம்.ஓ.ஏ. (பிரிவு யூனியன் ) ஏற்பாட்டில் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம். ஆசாதினால் நலன்புரிச்சங்க தலைவர் டொக்டர் ஏ.சீ.றஸாகிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிட்டத்தக்கது.

# முப்பது வயதுக்கு உட்பட்ட 17,110 பேருக்கு முதலாவது தடுப்பூசி- பணிப்பாளர் த.வினோதன்

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 28868 பி.சீ.ஆர் பரிசோதனையில் வியாழக்கிழமை (23.09.2021) வரை 2073 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இந்நாள் வரை முப்பது வயதுக்கு உட்பட்டோருக்கு 17110 முதலாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மன்னார் மாவட்டத்தின் கொரோனா தொற்று நோய் தொடர்பாக அவர் நாளாந்தம் வெளியிடும் தனது அறிக்கையில் வியாழக்கிழமை (23) அன்று தெரிவித்திருப்பதாவது

வியாழக்கிழமை (23.09.2021) மன்னாரில் 5 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதில் மன்னார் பொது வைத்தியசாலையில் 3 பேரும், பெரியபண்டிவிரிச்சான் மற்றும் தலைமன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் தலா ஒருவருமே கொரோனா தொற்றாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (23) வரை மன்னார் மாவட்டத்தில் 28868 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் 2073 கொரோனா தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2056 உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் இதில் இந்த மாதம் (செப்பரம்பர்) 389 நபர்கள் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் முதலாவது கொரோனா தடுப்பூசி 75603 ம், இரண்டாவது தடுப்பூசி 59334 ம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இவற்றில் முப்பது வயதுக்கு உட்பட்டோருக்கு 17110 முதலாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலையில் விசேட கூட்டம்



(அ .அச்சுதன்)

சுற்றாடல் அமைச்சுடன் தொடர்பு பட்ட திருகோணமலை மாவட்டத்திற்கு உரித்தான பிரச்சனைகள் மற்றும் உரிய விடயங்கள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சரின் வருகையை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் இதன்போது மரக்கன்றுகளும் அமைச்சரால் நடப்பட்டது.

அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அனைத்து வகையான அபிவிருத்திச் செயற்பாடுகளையும் சுற்றாடல் நேயமிக்க செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டு வருகின்றது. திருமலை மாவட்டத்தில் இயற்கை வளம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே குறித்த இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் பொறுப்புடையதாக காணப்படுகின்றது. குறிப்பாக இயற்கை வளங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து செயற்பட வேண்டும்.

மக்கள் தங்களுடைய வாழ்வாதார செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயல்படுவது மிக முக்கியமானதாகும். நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி நோக்கின் அடிப்படையில் அனைத்து விதமான செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருப்பதாக இதன்போது அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மணல் அகழ்வு மற்றும் ஏனைய சுற்றாடல் சார்ந்த பல பிரச்சினைகள் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள மணல் அகழ்வு பத்திரங்களில் கூடிய பட்சத்தை மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. மணல் அனுமதி பத்திரங்களை கூட்டுறவு முறையில் வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் அதன் மூலமாக மக்களுடைய வருமானத்தை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியதாக அமையும்.

பயன்படுத்திய காபன் பேனைகள் மற்றும் பாவனையில் இருந்து நீக்கப்பட்ட பற்தூரிகைகளை சேகரித்து அவற்றை மீற்சுழற்சிப்படுத்தும் நோக்கில் 270 குப்பைத்தொட்டிகள் திருகோணமலை மாவட்டத்திற்கு வழங்கப்பட உள்ளது.

அரச்ச நிதிக்கு புறம்பாக மக்களுடைய ஒத்துழைப்பு மூலம் இந்த வேலைத்திட்டம் நாடு முழுவதும் சுற்றாடல் அமைச்சரின் எண்ணக்கருவுக்கமைய நடைமுறைப்படுதப்பட்னு வருகின்றது.

இந்நிகழ்வில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் ஆகிய கபில நுவன் அத்துகோரல, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விஷேட வைத்திய நிபுணர் அணில் ஜாசிங்க, பிரதேச அரசியல் தலைமைகள், அரச உயர் அதிகாரிகள் மற்றும் மணல் அகழ்வு சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# க.போ.த சாதாரண தரத்தில் ஓட்டமாவடி கல்விக் கோட்டப் பாடசாலைகள் சாதனை

## கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அஹ்ஸாப்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

இம்முறை வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளின் படி கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டம் சாதனை படைத்துள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அஹ்ஸாப் தெரிவித்தார்.

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் சித்தி வீதத்தில் முன்னிலை பெற்றுள்ளது. அத்துடன் ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் இம்முறை இரு மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றிய இரு மாணவர்கள் 9அ சித்தி பெற்றமை விசேட அம்சமாகும்.

அத்துடன், செம்மண்ணோடை அல் ஹம்ரா வித்தியாலயத்தில் இம்முறை 9அ சித்தி கிடைத்தமை வரலாற்றுச் சாதனையாகும்.

மேலும் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா, மீராவோடை அல்ஹிதாயா, வாழைச்சேனை ஆயிஷா, வாழைச்சேனை அந்நூர் ஆகிய பாடசாலைகளில் கடந்த காலங்களை விட இம்முறை 9அ சித்தி பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

அந்தவகையில் ஓட்டமாவடி கோட்டத்தில் இம்முறை 24 மாணவர்கள் 9அ சித்தி பெற்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

இச்சாதனைகளை நிலை நாட்டிய மாணவர்களுக்கும் அவர்களின் கற்றலுக்கு பங்களிப்பு செய்த எமது பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் செயலட்டைகளை தயாரிப்பதற்காக அனுசரணை வழங்கிய தனவந்தர்கள், கல்குடா சகாத் நிதியம், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலட்டைகளை பிரதி செய்வதற்கு உதவிய எஸ்.எம்.கடாபி ஆசிரியர் உட்பட அனைவருக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்குச் சுதந்திரமான எதிர்காலம் இல்லை என்பதையே அரசின் செயற்பாடுகள் சுட்டி நிற்கிறது

அரசியல் கைதிகளுக்கு நேர்ந்த அவல நிலையின் வேதனை காயும் முன்னே மீண்டும் தமிழர்களின் நெஞ்சில் அரச பயங்கரவாதத்தின் கால்களை வைத்திருப்பது தமிழர்களுக்குச் சுதந்திரமான எதிர்காலமே இல்லை என்பதையே சுட்டி நிற்கிறது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை சத்திவேல் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் அமைதியான வாழ்வுக்கான அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்து சமயங்கள் போற்றும் அகிம்சையை வாழ்வாக்கி உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகியான திலீபன் நினைவாக விளக்கேற்றக்கூடாது எனத் தடை விதித்ததோடு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மூவர் ஏற்றிய விளக்கினை காலால் உதைத்தமை பேரினவாதம் தமிழர்களின் நெஞ்சில் சப்பாத்துக் கால்களால் உதைத்தமைக்கு ஒப்பாகும்.

அதுமட்டுமல்ல தமிழர்களை வன்முறைக்குத் தூண்டுகின்ற ஈனச் செயலுமாகும். இத்தகைய அராஜக அரச பயங்கரவாதமும் தொடரக்கூடாது. தொடர அனுமதிக்கமுடியாது.

அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தவரைக் கைது செய்யாது அரசு சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு சுதந்திரமாக இருக்க அனுமதித்து இருப்பது பயங்கரவாதம். போர்க்குற்றங்கள், மனிதக்குலத்திற்கு எதிரான குற்றங்க



ளைப் புரிந்தவர்களுக்குப் பாதுகாப்பும், பதவி உயர்வுகளும் கொடுப்பது பயங்கரவாதமாகும். அதேபோன்று நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து விடுவிப்பதும் பயங்கரவாதமாகும்.

இத்தகைய அரச பயங்கரவாதத்தின் சொந்தக்காரர்கள் சர்வதேசத்துக்கு முன்னால் நீலிக்கண்ணீர் வடித்து 'நாட்டை காப்பாற்றுங்கள்' என கூறுவது ஏமாற்று நாடகம். 'புலம்பெயர் சமூகமே பிரச்சினையைப் பேசித் தீர்ப்போம்' எனக் கூவி அழைப்பது ஏமாற்று நாடகத்தின் ஓர் அங்கமே. இத்தகைய பின்னணியிலேயே திலீபனுக்கு ஏற்றப்பட்ட விளக்கு காலால் உதைக்கப்பட்டது.

இது புலம்பெயர் சமூகத்தையும் எட்டி உதைப்பதற்குச் சமமாகும். அனுராதபுரம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்கு நேர்ந்த அவல நிலையின் வேதனை காயம் முன்னே மீண்டும் ஒட்டுமொத்த தமிழர்களின் நெஞ்சில் அரச பயங்கரவாதத்தின் கால்களை வைத்திருப்பது தமிழர்களுக்குச் சுதந்திரமான எதிர்காலமே இல்லை என்பதையே சுட்டி நிற்கிறது என அருட்தந்தை சத்திவேல் தெரிவித்துள்ளார்.

## ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் சமுர்த்தி சௌபாக்கியா வார தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்

(வி.சுகிர்தகுமார்)



சமுர்த்தி சௌபாக்கியா வார தேசிய வேலைத்திட்டம் சமுர்த்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இம்மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதி சமுர்த்தி சௌபாக்கியா வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் பல்வேறு வேலைத்திட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையின் கீழ் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி வங்கியினுடாக தொழில் முயற்சி கடன் வழங்கல் மற்றும் சமுர்த்தி லொத்தர் வீடமைப்பு திறப்பு விழா லொத்தர் மூலமாக வெற்றி பெற்றவர்களுக்கான காசோலை வழங்கல் மலசல கூடங்கள் கையளிப்பு போன்ற திட்டங்கள் இடம்பெறுகின்றன.

இதன் ஒரு கட்டமாக இன்று தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் ஆலையடிவேம்பு தெற்கு மற்றும் வடக்கு ஆகிய இரு சமுர்த்தி வங்கிகளிலும் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆலையடிவேம்பு தெற்கு மற்றும் வடக்கு வங்கியின் முகாமையாளர்களான கே.அசோக்குமார் எஸ்.சுரேஸ்காந்த ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்ற கடன் வழங்கும் நிகழ்வில் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ; கருத்திட்ட முகாமையாளர் ரி.மதியழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

## கல்முனை பற்றிமாவில் 3உ மாணவர்க்கு 9 ஏ: 1உ மாணவர் 8 ஏ



( வி.ரி.சகாதேவராஜா)

நேற்று வெளியான க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகளின்படி கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் 32 மாணவர்கள் சகலபாடங்களிலும் 9ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளதாக கல்லூரி அதிபர் அருட்சகோ. சந்தியாகு அடிகளார் தெரிவித்தார்.

மேலும் 12 மாணவர்கள்8ஏ சித்தி பெற்றுள்ளனர்.18மாணவர்கள் 7 ஏ சித்திபெற்றுள்ளனரென அடிகளார் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இம்முறை எந்தவொரு மாணவரும் 9எவ் எடுக்கவில்லையெனவும் அதிபர் தெரிவித்தார்.




## அடிப்படை வசதியின்றி வாழும் கண்டி கலஹா தோட்ட மக்கள்

(க.கிஷாந்தன்)







''எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி லயன் என்ற இருட்டறைக்குள் இன்னமும் வலி சுமந்த வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றோம். மலைநாட்டில் வாழ்ந்தாலும் குடிநீரை பெறுவதற்குகூட ஆயிரம் போராட்டங்கள். எந்நேரத்தில் வேண்டுமானாலும் லயன்கள் இடிந்து விழும் அபாயம் உள்ளது. இவ்வாறு உயிரை கையில் பிடித்துக்கொண்டே வாழ்கின்றோம். வருமானம் இல்லை. முன்னேற வேறு வழியும் இல்லை....''

இவ்வாறு விழி நீர் சிந்தியப்படியே தாம் அனுபவிக்கும் இன்னல்களையும், உள்ளக்குமுறல்களையும் வெளிப்படுத்தினர் கண்டி கலஹா குறுப், அப்பர் கலஹா தோட்டத்தில் வாழும் மக்கள்.

கொட்டும் மழையிலும், சுட்டெரிக்கும் வெளியிலும், சுழன்றடிக்கும் சூறாவளிலும் தமது உயிரையே பணயம் வைத்து, அட்டைக்கடி, குளவிக்கொட்டு, சிறுத்தை தாக்குதலென செரால்லொணாத் துயரங்களுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்தவர்கள்தான் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள். இன்றளவிலும் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு அவர்கள் பெரிதும் பங்களிப்பு செய்கின்றனர். கொரோனா நெருக்கடி காலத்திலும் உழைக்கின்றனர். ஆனால் அவர்களின் வாழ்வு இன்னும் மேம்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும். கலஹா அப்பர் தோட்ட மக்களின் வாழ்வு இதற்கு சான்றாகும் என மலையக சிவில் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. கண்டி மாவட்டத்துக்குட்பட்ட பகுதியிலேயே கலஹா இருக்கின்றது. அப்பகுதியிலுள்ள ஒரு தோட்டமே அப்பர் கலஹா வாகும். நான்கு லயன் குடியிருப்புகள் உள்ளன. சுமார் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

தேயிலை தொழில்மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்தே வாழ்வாதாரத்தை சமாளிக்கின்றனர். குறிப்பிட்டுள் கூறுமளவுக்கு உப தொழில்கள் எதுவும் அப்பகுதியில் இல்லை.

''தேயிலை மலைகள் காடுகளாகியுள்ளன. மிருகங்களின் இருப்பிடமாக மாறியுள்ளன. லயன் வீடுகள் அன்று இருந்த நிலையில்தான் உள்ளன. இன்னும் திருத்தப்படவில்லை. ஏன், குடிநீர் வசதிகூட இல்லை. '' என் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இன்றைய நவீன யுகத்திலும் அடிப்படை வசதிகள்கூட இன்றி பெருந்தோட்ட மக்கள் 'வலி' சுமந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு அவர்களின் சாட்சி ஒரு சான்று என மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மலையகத்தில் அசுர வேகத்தில் மாற்றம் ஏற்பட்டு வருவதாக மார்தட்டுபவர்கள், நகரப் பகுதிகளை அண்டியுள்ள தோட்டங்களை விடுத்து, தூர இடங்களிலுள்ள தோட்டங்களுக்கு சென்றால், அவலக்காட்சிகளை காணலாம் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது.

''வைத்தியசாலை வசதி இல்லை. தீவிர நோயெனில் பேராதனை அல்லது கண்டிக்கு பலமைல் தூரம் செல்ல வேண்டிய நிலைமை. எனவே, எமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுங்கள். தனிவீடுகளை அமைத்து தாருங்கள்.' எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

